037

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 03
இறுதிப் பரீட்சை – 2008
**LWU 1202** – ஒப்புரவுக்கொள்கைகள்.
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 26.03.2008 நேரம்: மு.ப 9.30 – ந.ப 12.30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி **I** இல் இருந்து 1 வினாவுக்கும் பகுதி **II** இல் இருந்து நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

01. "ஒப்புரவு அதன் நெகிழ்வுத்தன்மை, நடபடிமுறைமை மற்றும் அதன் மிகப்பொருத்தமான பரிகாரங்கள் காரணமாக மிகவும் பிரபல்பயம் அடைந்தது. மேலும் அது தமக்கென நிலையான விதிகளை கொண்டிருக்கவில்லை என்பதுடன் ஒவ்வொரு சான்சலரும் தமது சொந்த மனச்சாட்சிப்படி தீர்ப்பளித்தனர், எப்படியிருப்பினும் வழக்குகளின் விளைவுகள் தொடர்பில் இது விமர்சனங்களுக்கு வழிவகுத்தது."

    மேற்கண்ட கூற்றினை நுணுக்கமாக ஆராய்க.

02. தீர்ப்புக்களை ஆளுகின்ற விதிகளின் மூலாதாரங்கள் பொதுச்சட்டத்திற்கும் ஒப்புரவிற்கும் இடையிலான முக்கியமான வேறுபாடுகளில் ஒன்றாகும். சட்ட க்கோட்பாடுகள் அல்லது நியதிச்சட்டங்களை தொடர்புறுத்தி பொதுச்சட்டத்தின் தீர்ப்புக்கள் ஆக்கப்படுகின்றன. அதிலிருந்து வேறுபடும் வகையில் ஒப்புரவானது அதன் நியாயத்துவம் மற்றும் நெகிழ்வுத்தன்மைகளை முன்னிலைப்படுத்தி ஒப்புரவு முதுரைகள் என அறியக்கூடிய பொது வழிகாட்டல்களையே கொண்டுள்ளன.

    இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

## பகுதி II

03. திரு. கமலின் இறுதி விருப்பாவணத்தில் உள்ள பின்வரும் கையளிப்புகள் வலிதான நம்பிக்கையை உருவாக்கியுள்ளதா என ஆராய்க.

    (அ) எனது நூலகத்தினை பராமரிப்பதற்கு ரூபா. 200,000/= எனது சகோதரன் சுசிலுக்கு.

(ஆ) கஹவத்தையில் இருக்கும் எனது காணியை கஞ்சா பயிர்செய்கைக்கு பயன்படுத்தவும் மற்றும் அதிலிருந்து தரப்படும் இலாபம் எனது பிள்ளைகளைக் கற்பிப்பதற்கு பயன்படுத்தவும்.

(இ) எனது மைத்துனி சீதாவுக்கு எனது வங்கி மிகுதியின் கணிசமானளவு பகுதி.

(ஈ) எனது குடும்பத்தில் மிகவும் விரும்பத்தக்க அங்கத்தவர்களுக்கு மத்தியில் பிரித்துக் கொடுப்பாள் என்ற எதிர்பார்ப்பின் பேரில் எனது சொத்துக்களின் எஞ்சிய பகுதி எனது இளைய சகோதரி ஹரினிக்கு.

04. "இலங்கையின் நம்பிக்கைச் சட்டத்தில் எவ்வித குறிப்பான ஏற்பாடுகளும் ஆக்க ப்பட்டிருக்காத போது நம்பிக்கைக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 2 ஆங்கில ஒப்புரவு கோட்பாடுகளின் பிரயோகத்திற்கு இடமளிக்கின்றது"

L.J.M.. Cooray, *The Reception in Ceylon of the English Trust*, at p. 37.

மேற்கண்ட கூற்றினை நுணுக்கமாக ஆராய்க.

05. "வறுமை நிவாரணத்திற்கான நம்பிக்கைகள், கல்வி முன்னேற்றத்திற்கான நம்பிக்கைகள், சமயத்தினை முன்னேற்றுவதற்கான நம்பிக்கைகள் அத்துடன் முற்போந்த வகுதிக்குள் அடங்காத சமூகத்திற்கு நலன் தரும் ஏனைய நோக்கங்களுக்கான நம்பிக்கைகள் ஆகிய நான்கு முதன்மையான பிரிவுகளை தருமத்தின் சட்டக்கருத்து உள்ளடக்கியுள்ளது"

வருமானவரி ஆணையாளர் எதிர் பெம்செல் [1891] AC 531, 583

மேற்கண்ட கூற்றினை ஆராய்க. ஆங்கிலச்சட்டத்திலும் இலங்கை சட்டத்திலும் தர்ம நம்பிக்கையை உருவாக்குவதான தேவைப்பாடுகளை ஒப்பிட்டு வேறுபடுத்துதல் உம்மால் எதிர்பார்க்கப்படுகின்றது.

06. (அ) நிகழ்காலத்தில் வலுவிலுள்ள எந்தச்சட்டத்தினாலும் நம்பிக்கையாளனின் மீது சுமத்தப்பட்ட எந்த கடமை முறிவிற்கும் ஓர் நம்பிக்கையாளன் வழக்கிடப்படலாம் என நம்பிக்கைக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 3(j) குறிப்பிடுகின்றது. நம்பிக்கையாளனின் பொறுப்புடமை தொடர்பிலான விடேச சந்தர்ப்பங்களை கருத்தின்ற கொண்டு நம்பிக்கையாளனின் பொறுப்புக்களை விளக்குக.

(ஆ) நம்பிக்கை ஆக்குனரின் உளக் கருத்தினை செயற்படுத்தும் பயனாளியின் உரிமைகளை சுருக்கமாக விளக்குக.

07. (அ) சிறு அளவிலான தேயிலை ஏற்றுமதி வியாபாரத்தில் ரண்மல் மற்றும் சுனில் ஆகியோர் பங்குடமையாளர்களாவர். 2006ஆம் ஆண்டில் ரண்மல் ஓர் வாகன விபத்தில் இறந்தார். சுனில் பங்குடமையின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு பதிலாக வியாபாரத்தின் எல்லா சொத்துக்களையும் தக்க வைத்துக்கொண்டார். ரண்மலின் மகன் சந்தமல் தமது தந்தையின் மூலதனப்

பங்கில் இருந்து பெறப்பட்ட இலாபப்பங்கினை சுணிலிடமிருந்து கோருகின்றான். ஆனால் சுணில் எவ்வித பங்குகளையும் தர மறுக்கின்றார்.

சந்தமல்லுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) பலசரக்கு கடையொன்றின் சொந்தக்காரியாகிய மாலா இரத்தப்பரிசோதனை ஒன்றினை செய்வதற்கு தமது குடும்ப மருத்துவரிடம் சென்றாள். அதன் தொடர்ச்சியாக அவளது குருதிப் பரிசோதனை பெறுபேறுகள் குருதி புற்றுநோய்க்கு சார்பாக உள்ளதாக அவளது மருத்துவரினால் அறிவுறுத்தப்பட்டாள். மாலா பெறுபேறினை இட்டு கவலையடைவதுடன் அவள் அது காரணமாக மரணம் அடைவாள் என அஞ்சினாள். இதன் காரணமாக தமது பலசரக்கு கடையினை தன் சகோரனான சம்பத்திற்கு கைமாற்றினாள். மூன்று மாதங்களின் பின்னர் மாலாவின் குடும்ப மருத்துவர் மாலாவினை அழைத்து மன்னிப்பு கோரியதுடன் அவளது இரத்தப் பரிசோதனை இன்னொரு நோயாளியின் இரத்தப்பரிசோதனையுடன் கலந்து விட்டதாகவும் மாலாவினது இரத்தப் பரிசோதனை குருதி புற்றுநோய்க்கு சார்பற்றதாகவும் உள்ளதாக கூறினார். இதன் பிறகு மாலா பலசரக்கு கடையினை தமக்கு மீள கைமாற்றுமாறு சம்பத்திடம் கோரினாள். சம்பத் அவ்வாறு செய்ய மறுக்கின்றான்.

மாலாவிற்கு ஆலோசனை வழங்குக.

08. பின்வருவன எவையேனும் **இரண்டினைப்பற்றி** குறிப்பெழுதுக.

(அ) நம்பிக்கையின் தன்மை.

(ஆ) சைப்பிரஸ் தத்துவம்

(இ) நம்பிக்கை முறிவு

(பதிப்புரிமையுடையது)